# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

மானியக் கோரிக்கை எண் : 53

# அறிவிப்புகள்
# 2024 - 2025

**உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# சிறப்புத் திட்டச்
# செயலாக்கத் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சார்பில் 6 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

## 1. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட திறன் மையம் உருவாக்கப்படும்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கீழ் அமைக்கப்படும் மாவட்ட திறன் மையத்தில், நான் முதல்வன் திட்டம் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒரு திறன் மேம்பாட்டு அலுவலர், இளம் வல்லுநர்கள் மற்றும் இல்லம் தேடி கல்வித் திட்டத் தன்னார்வலர்கள் கொண்ட குழு செயல்படும். இதே போன்று தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒரு மாவட்ட திட்ட அலுவலர், இளம் வல்லுநர்கள் மற்றும் இல்லம் தேடி கல்வித் திட்டத் தன்னார்வலர்கள் கொண்ட குழு செயல்படும்.

## 2. அரசின் முக்கிய திட்டங்களைக் கண்காணிக்க மாவட்ட அளவில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிப்பு அலகு உருவாக்கப்படும்.

அரசின் முக்கிய திட்டங்களைக் கண்காணிக்க, மாவட்ட அளவில் ஏற்படுத்தப்படும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிப்பு அலகு தலா ஒரு புள்ளி இயல் அலுவலர் மற்றும் புள்ளி இயல் ஆய்வாளர் கொண்டு அந்தந்த மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குநர் கீழ் செயல்படும்.

**3. வேலைவாய்ப்பினை எதிர்நோக்கும் தமிழ்நாட்டு இளைஞர்கள் பயன் பெறும் வகையில் அவர்களுக்கு "திறன் ஓலைகள்" (Skill Vouchers) மற்றும் பணியிடப் பயிற்சி (Internship) வழங்கும் "திறன் தமிழ்நாடு–நிறைப் பள்ளிகள்" (TN Skills–Finishing Schools) என்ற திட்டம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

நான் முதல்வன் திட்டத்தின் தொடர்ச்சியாக, கல்லூரி பட்டப்படிப்பை முடித்த வேலை தேடும் இளைஞர்களுக்கு அவர்களின் பட்டப்படிப்பு, தனித் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை அணுகுவதற்கு "திறன் தமிழ்நாடு–நிறைப் பள்ளிகள்" (TN Skills–Finishing Schools) என்ற மாபெரும் திட்டம் துவங்கப்படும். பயிற்சியின் முடிவில் பணியிடப் பயிற்சி (Internship) மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்படும்.

சர்வதேச சான்றிதழ் மற்றும் தொழில் துறை அங்கீகாரத்துடன் திறன் அடிப்படையிலான படிப்புகளை வழங்கச் சிறந்த நிறுவனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த தொழில் நிறுவனங்கள் இளைஞர்களுக்கு முழு மற்றும் பகுதி அளவு மானியத்துடன் கூடிய திறன் ஓலைகளை வழங்கும். பின்தங்கிய இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் திறன் ஊக்கத் தொகையினையும் வழங்கும்.

**4. நான் முதல்வன் திட்டத்தின் திறன் சார்ந்த படிப்புகள் 45,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் துணை மருத்துவ படிப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.**

பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கான நான் முதல்வன் திறன் சார்ந்த படிப்புகள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நான் முதல்வன் திறன் அடிப்படையிலான படிப்புகளைத் துணை மருத்துவ படிப்புகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

**5. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் சிறந்த 1,000 மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து உயர் வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர "சிகரம் தொடு" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.**

கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் சிறந்த 1,000 மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து உயர் வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும். மாணவர்கள் தகுதித் தேர்வில் அவர்களின் செயல்திறன் அடிப்படையில் அடையாளம் காணப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து பல்வேறு துறை சார்ந்த திறன்கள் மற்றும் அனுபவரீதியான செயல் இலக்குகள் மூலம் மேம்படுத்தப்படுவார்கள். இவர்களுக்குச் சிறந்த தொழில்முறை பயிற்றுனர்கள் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு உயர்தர படிப்புகளைப் படிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும்

6. நமது திராவிட மாடல் அரசின் முக்கிய குறிக்கோளான 2030ல் ஒரு டிரில்லியன் அமெரிக்கன் டாலர் இலக்கை எட்டுவதற்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானதாகும். எனவே, பெண்கள் முறைசார்ந்த தொழில்கள் மற்றும் உயர்தர பணிகளில் ஈடுபடுவது அவசியமானதாகும். இதற்காகத் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு என்ற புதிய திட்டம் உலக வங்கியின் உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு (2024–29) 1185 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் இவ்வாண்டு 168 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

i. மாவட்டங்களில் உள்ள பெண்களின் திறமைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப மகளிருக்கான தரமான வேலைவாய்ப்புத் திட்டம் உருவாக்கப்படும். முதற்கட்டமாக 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

ii. மகளிருக்குப் பயனளிக்கக் கூடிய திறன் மேம்பாடு, தொழில் முனைவோர், உளவியல் கலந்தாய்வு, வேலைவாய்ப்பு தொடர்பான விவரங்கள், பெண்களின் பணியிட பாதுகாப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் அளிக்கும் வகையில் மகளிர் தகவல் வங்கி உருவாக்கப்படும்.

iii. அரசுப் பள்ளிகளில் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகள் தங்களுக்கு ஏற்றப் பணியினை தேர்ந்தெடுப்பதற்காக உளவியல் பரிசோதனை (Psychometric Test) மூலம் அவர்களது திறமைகளைக் கண்டறிய 'திறமை மதிப்பீட்டுதளம்' (Talent Assessment Platform) உருவாக்கப்படும்.

iv. தமிழ்நாட்டில் பெண்களைத் தொழில் முனைவோர்களாக்க பள்ளிப் பருவத்திலேயே மாணவிகளுக்குக் கற்பிக்கும் பொருட்டு, பள்ளிகளில் தொழில் முனைவு குறித்த பாடத் திட்டம் (Earlypreneurship Programme) இவ்வாண்டு முதல் சேர்க்கப்படும்.

v. வகுப்பறைக் கற்றலுக்கும் நடைமுறைச் செயல்பாடுகளுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்க, அரசுக் கல்லூரிகளில் இறுதியாண்டு படித்து வரும் மாணவிகளுக்குத் தொழில்துறை சார்ந்த பணியிடப் பயிற்சி (Internship Training) அளிக்கப்படும்.

vi. தமிழ்நாட்டில் உள்ள 10 மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் (ITI), 4 மகளிர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic) 4,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் S T E M (Science Technology Engineering & Mathematics) மையங்கள் உருவாக்கப்படும்.

vii. பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் "மாதிரி மழலையர் காப்பகங்கள்" (Model Creche cum After School Care) மற்றும் வீட்டில் தனியாக இருக்கும் முதியோர்களை பராமரிக்கும் வகையில் "முதியோர் சமூக மையங்கள்" (Elderly Community Hubs) உருவாக்கப்படும்.

**உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்